# ஒடுக்கப்பட்ட கள்ளிக்குளம கிராம வாசிகள்

வவுனியா வடக்கின் ஓமந்தை ஏ9 வீதியிலிருந்து 10கி.மீ தூரத்தில், 215சி கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு உட்பட்டதே இந்த கள்ளிக்குளம். 250 குடும்பங்கள் வரை வாழும் இக்கிராமத்தின் வாழ்கை நிலையோ மிகவும் கவலைக்கிடமான தொன்றாகும். ஏ9 வீதியில் இருந்து மிகவும் தொலை தூரத்தில் அமைந்துள்ள இக்கிராமத்திற்கான போக்குவரத்தானது பாரிய பிரச்சினையாகவும் காணப்படுகின்றது. அதாவது வீதிகள் திருத்தப்படாமை, உபயோகத்திற்கு பொருத்தமற்ற நிலையிலும் காணப்படுகின்றது.

இவ் வீதிப் பிரச்சினையின் காரணமாக போக்குவரத்து மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள் அன்டாடம் பாடசாலைச் செல்வதற்கு பாரிய சவால்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளது, நேரத்திற்கு பாடசாலைக்கு செல்லமுடியாமை. சீரற்ற வீதியினால் துவிச்சக்கர வண்டிகளில் பயணிப்பதில் சிரமம், பாடசாலை முடிய கடும் வெயிலில் சிறுபிள்ளைகள் நடந்து வரவேண்டிய அவல நிலை, தங்களது அன்றாட கருமங்களை செய்ய முடியாது அவதிபடுவதை நாளாந்தம் காணக்கூடியதாகவுள்ளது.

வைத்தியசாலை வசிதிகளும் இல்லாமையால் வவுனியா நகருக்கே நோயாளிகள், கர்பிணிப் பெண்களை கொண்டு செல்ல வேண்டிய தேவை காணப்படுகின்றது. இது தொடர்பாக கள்ளிக்குளம் மக்கள் தெரிவிக்கையில் ‘‘எமது கிராமத்தில் திருமணமாகி ஒருவருடமே ஆன நிலையில் குழந்தை ஒன்றை பெற்றெடுத்த தாய் குழந்தைப் பிறந்து இரண்டு மாதங்களில் குழந்தையை தேள் கொட்டி விட்டது, இந் நிலையில் தன் குழந்தையை காப்பாற்றிக் கொள்ள மா பெறும் சவால்களுக்கு அந்த தாய் முகம்கொடுக்க நேரிட்டது.’’ இதற்கு காரணம் கள்ளிக்குளம் கிராமத்திற்கான சரியானதொரு போக்குவரத்து வசதி, மின்சார வசதியோ அல்லது வைதத்தியசாலை வசதிகள் இன்மையாகும்.

இவ்வாறு பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் கள்ளிக்குளம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளில் ஒன்றாக காணப்படுவது குடிநீரை ஆகும். குடிநீரை பெற்றுக் கொள்ள குளம் இருந்தும் அது சீரமைக்கப்படாமையால் குடிநீரைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இக்கிரமத்தின் ஆதிகால குடியேற்றத்தில் இருந்து சுமார் 14 குளங்கள் இங்கு காணப்படுகின்றன. தற்போது இக்குளங்கள் அனைத்துமே புணரமைக்கப்படாமல், சுத்திகரிக்கப்படாமல் உபயோகமற்ற நிலையில் காணப்படுகிறது. இது தொடர்பாக கிராம அபிவிருந்திக் குழூத் தலைரை தொடர்பு கொண்ட போது கள்ளிக்குளம் கிராமத்தின் காணிகளும், குளங்களும் வெறுமனே பற்றைக் காடுகளால் மூடப்பட்டு எவ்வித அபிவிருத்தியோ அல்லது புணரமைப்புகளோ இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என மேலும் தெரிவித்தார்.

மேலும் இக்கிராம மக்களினுடைய பிரதான வாழ்வாதாரம் விவசாயமாகும். கிராமத்தின் குளங்களை புணரமைக்கப்பட்டால் குடிநீர் மாத்திரம் மற்றும் சுமார் 200

ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்வதற்கு போதுமான நீரைப் பெற முடியும். ஆனால் தற்போது இக்குளப்பிரச்சினையின் காரணமாக காணி பூமிகள் வரண்ட நிலையிலேயே காணப்படுகிறது. இதன் காரணமாக கிராமத்தின் முதியோர், இளைஞர்கள் மற்றும் யுவதிகள் அனைவரும் விறகுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இளையோர் சமுதாயம் தொழில் பிரச்சினையால் நகரங்களுக்குச் சென்று சீரழிந்து செல்லும் நிலையையும் அவதானிக்க முடிகிறது.

இது தொடர்பில் குறிப்பிட்ட அரச அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே புணரமைக்கப்பட வேண்டிய இக்குளங்களை இணங்கண்டு அவற்றை புணரமைத்து, சுத்திகரித்து, குளக் கட்டினை அமைத்து வடிகாலமைப்பு சீர் செய்து கொடுக்கப்படுமாயின் கள்ளிக்குளம் மக்களின் தாகம் மாத்திரம் அல்லாமல் வாழ்வாதாரப் பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கும் என்பதே இம் மக்களது கருத்தாகும்.